# தேசிய அளவில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் மலையக மக்கள் தொடர்பான புகைப்பட ஊடகவியல் : ஓர் ஆய்வு

**டிலான் கிஷாந்தன், மை., ரகுராம், சி.**
ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
michealdilan8@gmail.com

*ஊடகங்களே உலகின் மூன்றாவது கண்ணும் அரசின் பாதுகாவலனும் ஆகும்.இன்று ஊடகங்களானவை ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்றும் அழைக்கப்படுகின்றன. அந்த வகையில் தேசியளவில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் மலையக மக்கள் தொடர்பான செய்தி அறிக்கையிடல்களில் புகைப்பட ஊடகவியல் எவ்விதம் பயன்படுத்தப்பட்டுள்ளது, மலையக மக்கள் தொடர்பான புகைப்படங்களுக்கான முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ள விதம், செய்தி அறிக்கையிடலின் போது பயன்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் ஊடக அறங்களுக்கு உட்பட்டுள்ளனவா, பயன்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் உண்மைத் தன்மை மிக்கனவா முதலான விடயங்களை கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும். குறித்த ஆய்வுச் செயற்பாடானது இலங்கையில் தேசிய அளவில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளான தினகரன், தினக்குரல், வீரகேசரி ஆகிய பத்திரிகைகள் குறிப்பிட்ட இரண்டு வாரங்களுக்குள் தரவு சேகரிப்புக்கு உட்படுத்தும் உள்ளடக்க ஆய்வாக மேற்கொள்ளப் பட்டமையோடு ஆய்விற்காக முதன்நிலைத்தரவு சேகரிப்புக் கருவிகளாக நேர்காணல், நிகழ்நிலை கலந்துரையாடல் மற்றும் அவதான முறையும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பிற்காக செய்தித்தாள், சஞ்சிகைகள், நூல்கள், ஆய்வு கட்டுரைகள், இணைய கட்டுரைகள் வலைப்பூக்கள் போன்றன வும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகள் திரட்டப் பட்டு பண்புசார் முறையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் அனைத்துக்கட்டங் களிலும் ஆய்வு ஒழுக்கவியல் பின்பற்றப்பட்டது. தமிழ்த் தேசிய பத்திரிகைகளில் மாதிரி களாக தெரிவு செய்யப்பட்ட தினகரன், தினக்குரல், வீரகேசரி முதலான பத்திரிகை களினுடைய அச்சுப் பிரதிகள் அவதானிக்கப்பட்டு, தகவல்கள் திரட்டப் பட்டு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, முடிவுகள் பெறப்பட்டன. அதனடிப்படையில் ஆய்வின் முக்கிய முடிவுகளாக மலையக மக்கள் தொடர்பான புகைப்பட ஊடகவியலுக்கு வழங்கியுள்ள முக்கியத்துவம் ஏனைய செய்திகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் மலையக மக்களின் வாழ்வியல் கோலங்கள் அவற்றில் உண்மையாக பிரதிபலிக்கப்படவில்லை என்ற முடிவுகள் கிடைக்கப்பெற்றமையோடு பத்திரிகைகள் தங்களுடைய கருத்து நிலைச்சட்டகத்திற்கேற்ப தகவல்களை பரப்புவதோடு உண்மையான விடயங்களை மறைத்தே கருத்துக்களைப் பகிருகின்றன என்பதும் ஆய்வு முடிவாக வெளிவந்துள்ளது. எனவே இந்த ஆய்வு பத்திரிகை ஊடகங்களானவை ஒரு சமூகத்தை பற்றிய கருத்துக்களை வெளியிடும் போது அவற்றின் உண்மைத் தன்மையை அறிந்து வெளியிடுவதோடு எதிர்காலத்தில் இலங்கையில் வெளிவருகின்ற தமிழ்ப் பத்திரிகைகள் தங்களது செய்தி அறிக்கையிடல்களில் மலையக மக்களினுடைய வாழ்விய லினை ஏனையோருக்கு எவ்வாறு எடுத்து கூற முயற்சிக்கின்றன என்பது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வது முக்கியத்துவ மானது என்பதையும் பரிந்துரைக்கிறது.*

**திறவுச்சொற்கள்:** செய்தி அறிக்கையிடல், ஊடக அறம், வாழ்க்கைக் கோலம், தோட்டப்புற மக்கள், இலக்கு பெறுநர்கள்